


திருவாசகம் - 36

# திருப்பாண்டிப்பதிகம் கதைவடிவில்

கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# திருப்பாண்டிப்பதிகம் கதைவடிவில்
# சிவானந்த விளைவு
# திருப்பெருந்துறையில் அருளியது

**பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற் காரமுதாம்**

**ஒருவரை ஒன்றுமில்லாதவ ரைக்கழற் போதிறைஞ்சித்**

**தெரிவர நின்றுருக் கிப்பரி மேற்கொண்ட சேவகனார்**

**ஒருவரை யன்றி உருவறியா தென்றன் உள்ளமதே. 01**

“நல்லை அண்ணை, கதிரேசன் ஒரு விடயத்தை ஆராயாது சொல்லமாட்டார். வேதத்தை ஓத ஆச்சாரியர் தேவை. அது வடமொழியில் இருப்பதால் ஓதும் முறையை அறிந்த பின்பே ஓதுதல் வேண்டும். வேதம் ஓதுவதற்குச் சமனானது. நமசிவய என்ற பஞ்சாட்சர மந்திரத்தை ஓதுவது. பஞ்சாட்சரத்தை ஓதி இறைவனை அழைக்கச் சிவனால் படைக்கப்பட்ட உயிர்களுக்கு உரிமை உண்டு. அதைக் கூறினால் மோட்சமும் கிடைக்கும். கடல் அலைகள் வீசும், நீண்டு பரந்திருக்கும். பெருமழை பெய்து ஆற்று நீர் பெருகி வந்தாலும் அதை அமைதியாக ஏற்றுச் சலனமின்றி இருக்கும். கடலைப் போன்றவர் தான் சிவன். அவர் எல்லா உயிர்களினதும் குறைநிறைகளை அமைதியாகக் கேட்பார். அவர் கேட்கத் தேவையில்லை. ஏனென்றால் எல்லாரது மனதிலும் இருக்கும். அவர் ஒருவர் எண்ணுவதையும் அறிந்து கொள்வார். ஆத்ம சாதனங்களுள் நமசிவய என்ற பஞ்சாட்சரமந்திரம் வலிமை மிக்கது. அதை ஓதும் நீ துரைசிங்கத்தின் காணி விடயத்தில் பற்றுக் கொண்டு விட்டாய். மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவது போல ; “பார்வதி சமேதரரும், பாண்டிய மன்னனுக்கு அமிர்தமானவரும், நாமரூபமற்றவருமான சிவன் குதிரை மீது வந்து என்னை ஆட்கொண்டனன். அழகிய சிவனை வணங்குவேன். அவர் ஒருவரே எனது காட்சிக்கு இலக்காகின்றார்.” என்று வாயோயாமல் சொல்லும் நீ ஏன் பற்றுக் கொண்டாய். முன்பு பற்றுக்களால் அவதிப்பட்ட நான் தீய செயல்களைத் தவிர வேறு எதையும் செய்வதில்லை. இப்போ சிவனைத் தொழ ஆரம்பித்த பின் பற்றுக்கள் எவையும் என்னைப் பற்றுவதில்லை. பற்றுக்கள் என்னைத் தேடி வரும். அவற்றைச் சிவநினைவு அழித்துவிடும். முன்பு நான் தொடர்பு வைத்த பெண்கள் சில மாதங்களுக்கு முன்பு வலிய வந்து உறவாட விரும்பினர். பற்றுக்களில் கொடிய பற்று காமப்பற்று. அவர்கள் வந்து எனது மனதை மாற்ற முடியாதென்று உணர்ந்து

சென்றுவிட்டனர். இது ஒரு சிறிய பற்று. உறவு என்பது நல்லது நடக்கும் வரை நீடிக்கும். ஆனால் உனக்குக் கெட்டதற்காகப் பற்றேற்பட்டுள்ளது. அதனால் எனக்கு என்ன இலாபம். நேற்று துரைசிங்கம் என்னைத்தேடி மதுவுடனும் மாமிசத்துடனும் வந்தவன். அவனைக் கண்டதும் நான் சிவனை எண்ணினேன். அவன் வந்து கதைத்துவிட்டு சென்று விட்டான். அப்படிப்பட்ட சிவனைப் பலகாலமாக வணங்கும் உனக்குப் பற்றுக்களை அழிக்கும் வகை தெரியாது தடுமாறிப் பற்றுள் விழுந்துவிட்டாய். துரைசிங்கத்தின் மனைவி பிள்ளைகளே துரைசிங்கத்தை உறவென்று கருதுவதில்லை " என்றார் மகாலிங்கம்.

**சதுரை மறந்தறி மால்கொள்வார் சார்ந்தவர் சாற்றிச்**

**சொன்னோம் கதிரை மறைத்தன் சோதி கழுக்கடை**

**கைப்பிடித்துக் குதிரையின் மேல்வந்து கூடிடு மேற்குடி கேடு**

**கண்டீர் மதுரையர் மன்ன் மறுபிறப்போடமறித்திடுமே 02**

"நல்லை அண்ணை, நாம் மாணிக்கவாசக சுவாமிகளைச் சிவன் என எண்ணிப் போற்றுபவர்கள். இது எமது சிவன் கோவில் நடைமுறை. திருவாசகத்தை மாதந்தோறும் முற்றோதல் செய்கிறோம். திருவெம்பாவைப் பூசை முடிய மாணிக்கவாசக சுவாமிகளைத் தேரின் மீது ஏற்றி வீதி வீதியாகச் சென்று மக்களைத் தரிசிக்கிறோம். அவரது நடைமுறைகளைப் பின்பற்றுகிறோம். மாணிக்கவாசக சுவாமிகள், "சிவனைச் சார்ந்தவர்கள் தற்போதும் இழந்து ஞானவேட்கை கொள்வர். இது உறுதியான எனது வாக்கு. சூரிய ஒளியை விடப் பன்மடங்கு ஒளியை உடைய சிவன் கையில் சூலம் ஏந்தி வந்ததைப் பார்த்ததற்குப் பிறகு பிறவிப்பிணி என்னை விட்டுச் சென்றுவிட்டது. அதைப் பார்த்த மதுரை மன்னனது தீவினைகள் யாவும் அகன்றமையால் அவனுக்கும் பிறவிப்பிணி அகன்றுவிட்டது" என்று கூறியதால் கதிரேசன் சிவன்கோவிலின் மேற்குச் சுவரில் சிவன் வந்த அக்கோலத்தை அழகிய சித்திரமாகத் தமது செலவில் வரைந்துள்ளார். அதைப் பார்ப்பவர்களின் பிறவிப்பிணியை அகற்ற வேண்டுமென்பதே கதிரேசனது எண்ணமாகும். அதனால் தான் அச்சித்திரத்தை நேரம் கழிவது தெரியாமல் பார்த்துக் கொண்டிருப்பேன். சித்திரத்தை வரைந்தவன் தத்ரூபமாக அக்காட்சியை வரைந்தமையால் பார்ப்போர் பரவசமடைகின்றனர். அச்சித்திரம் மனதுள் ஒரு புனிதத்தை உண்டாக்குகின்றது. நீங்கள் அதைப் பர்ப்பதில்லையா? பார்க்காவிட்டால் சிவனை நினைத்துக் கொண்டு பாருங்கள். சிவன் சூலத்துடன் உயிர் பெற்று குதிரையில் வருவதுபோல இருக்கும்" என்றார் மகாலிங்கம்.

“நான் தான் அதை வரைந்தவனை அழைத்து வந்து கதிரேசனிடம் விட அவர் அவனைக் கொண்டு வரையும்போது நான் கூட இருந்தது உனக்கு மது மயக்கத்தில் அன்று தெரியவில்லை. இன்று நீ பெரும் சிவபக்தனாக எனக்கு உபதேசிக்கிறாய்” என்று சொல்ல நினைத்தார் நல்லைநாதன். ஆனால் அவரால் அதைச் சொல்ல முடியவில்லை.

**நீரின்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங்கொண்டீர்**

**பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட பாண்டியனார்**

**ஓரின்ப வெள்ளத்துருக்கொண்டு தொண்டரை உள்ளங் கொண்டார்**

**பேரின்ப வெள்ளத் துட் பெய்கழ லேசென்று பேணுமினே. 03**

அப்போது கதிரேசன் சொன்னது நல்லைநாதனுக்கு நினைவில் வந்தது; “நல்லை, உலக இன்பம் நிலையானது என்று தான் பலரும் நம்புகின்றனர். தாம் தேடும் பொருட்கள் தம்முடைய குடும்பத்தின் வாழ்வை மேம்படுத்தும் என்றும் நினைக்கின்றனர். அதனால் தாம் தாம் பெரியவர், எல்லாம் தெரிந்தவர் என்று நினைக்கின்றனர். இது தவறு. உலக இன்பம் நிலையற்றது. அது இடை நடுவில் மாறக்கூடியது. பிரபாகரனை உனக்குத் தெரியும். அவன் உயர்ந்த உத்தியோகத்தில் இருந்தவன். பெரும் பணக்காரனின் மகன். பெற்றோர் அவனுக்குப் பெண் தேடியபோது நூற்றுக்கணக்கான பெண்களைப் பார்த்து விட்டு ஒவ்வொரு பெண்ணுக்கும் பல குறைகளைக் கூறியவன். சாமுத்திரிகா இலட்சணம் அனைத்தையும் பார்த்தவன். பெரும் பிரயாசத்துக்குப் பின் நிர்மலா என்ற பணக்காரப் பெண்ணின் அழகில் மயங்கி அவளைத் திருமணம் செய்தவன். திருமணமாகி ஒரு வருடம் கழிவதற்குள் அவளுக்குக் கடுங்காய்ச்சல் நோய் தாக்கியமையால் அவளது தலைமுடி அனைத்தும் உதிர்ந்து விட்டது. இப்போ அவன் அவளை கூட்டிக் கொண்டு வைபவங்களுக்குச் செல்வதில்லை. கடவுளால் படைக்கப்பட்ட அனைத்தும் மாயமானவை. உலகம் மாயமானது என்பதை அறியாதவர்கள் பல்வேறு வகையான கனவுகளைக் கண்டு மயங்குகின்றனர். இதை உணர்த்தி மக்களை அவற்றில் இருந்து நீக்கிப் பேரின்ப வாழ்வு அளிக்கத்தான் சிவன் குதிரை வீரனாக வந்தவர். அதனால் என்றும் பேரின்பப்பொருளான சிவனை நாடுங்கள்” என்று மாணிக்கவாசகர் கூறுவதை நினைவில் கொண்டு சிவன் குதிரையில் வரும் உருவைப் பார்த்தால் பற்றுக்கள் யாவும் அழிந்துவிடும்.

அதை நினைத்து மிகுந்த கவலையோடு மகாலிங்கத்திற்குச் சொன்னார்; "நான் செய்தது மகா தவறு. ஆனால் மகா தவறுகள் பலவற்றையும் செய்த அசுரனை மன்னித்தவர் சிவன். அத்தகைய சிவனின் பக்தனாகிய கதிரேசன் என்னை மன்னிப்பார். அவர் மன்னிப்பது சிவன் மன்னிப்பது போன்றதாகும்" என்றார் நல்லைநாதன்.

**செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின் தென்னன்**
**நன்னாட்டு இறைவன் கிளர்கின்ற காலமிக் காலம் எக்**
**காலத்துள்ளும் அறிவொண் கதிர்வாள் உறைகழித் தானந்த**
**மாக்கடவி எறியும் பிறப்பை எதிர்த்தார் புரள இருநிலத்தே. 04**

நல்லைநாதனும் மகாலிங்கமும் கதிரேசனின் வீட்டுக்கு வந்தபோது கவிதாவும் மகேசனும் அங்கிருந்தனர். கவிதா சொன்னாள்; "நல்லை அண்ணை திடீரென்று கதிரேசன் தாத்தாவுடைய மனைவியான பாட்டி மயங்கிவிட்டா. வைத்தியர் மாதுமை வந்து பரிசோதித்துப் பார்த்துவிட்டு இனிமேல் விரதம் அனுட்டிக்கக்கூடாது. வயது செல்லச் செல்ல ஆரோக்கியத்தில் கவனமெடுக்க வேண்டும். சிவனை மனதால் நினைத்தால் போதும். சிவனடியார்களுக்கு அவர் ஓடி ஓடி வந்து உதவுவார். காலையில் பாலும் குடிக்காத விரதம். இனி இவ்வாறு செய்யக்கூடாது" என்று கூறிவிட்டுச் சென்றா. நான் நாலைந்து நாட்களுக்கு இங்கே தங்கியிருக்கப்போகிறேன்" என்றாள். அவர்கள் பேசுவதைக் கதிரேசன் கேட்டாரே தவிர வெளியே வரவில்லை. அவருக்கு நல்லைநாதனைப் பிடிக்கவில்லை. அதனால் நல்லைநாதன் உள்ளே சென்று, "அண்ணை நான் உங்களைப் போன்ற பக்தன் அல்ல. நீங்கள் பெரும் சிவபக்தர். நான் சிவனை வணங்குபவன். உங்களைப்போல் எதிர்காலத்தில் நடப்பவற்றை என்னால் அறிந்து கொள்ள முடியாது. நீங்கள் பெரியவர்; நல்லவர். நல்லவர்கள் பிறவியைப் பெருக்கலாகாது. இறைவனுடைய அருளைப்பெற ஒவ்வொரு கணமும் பிரார்த்திக்கும் நீங்கள் மனதில் எதையும் வைத்திருத்தலாகாது. நான் அறியாமையால் செய்த பிழையை மன்னியுங்கள். எனது செயலை மனைவியும் பிள்ளைகளும் கண்டித்தவர்கள். மனைவி நேற்று முழுவதும் சாப்பிடவில்லை. அதனால் நானும் சாப்பிடவில்லை. மாணிக்கவாசக சுவாமிகள், "சிவன் ஞானவாள் ஏந்தி, ஆனந்தம் என்னும் குதிரைமீது ஏறிவந்து உலகில் உள்ளவர்களின் பிறப்பை அழித்தொழிக்கிறான்" என்று கூறுவதை அறிந்தும் நான் பிழைவிட்டுவிட்டேன் என்னை மன்னியுங்கள்" என்றார்.

கதிரேசனின் முகத்தில் இரந்த இறுக்கம் குறையாததைக் கண்ட கவிதா சொன்னாள்; "நீங்கள் இனிமேல் இவ்வாறு நடக்கக்கூடாதென்பதற்காகச் சிவன் குதிரையில் ஏறிவந்ததுபோலத் தாத்தா கோபத்தில் ஏறி இருக்கிறார். அது இக்கணமே மறைந்து விடும்." என்று சொல்லக் கதிரேசன் தன்னை மறந்து சிரித்தார்.

"என்னை அண்ணை மன்னித்து விட்டார்" என்றார் கதிரேசன்.

**காலமுண்டாகவே காதல்செய் துய்மின் கருதரிய**

**ஞாலமுண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய**

**ஆலமுண்டான்எங்கள் பாண்டிப்பிரான்தன் அடியவர்க்கு**

**மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே. 05**

"நல்லை, உயிரோடு இருக்கும்போது சிவன்மீது அன்புபூண்டு கடைத்தேறுதல் வேண்டும். சிவானந்த அமுதைச் சிவன் தனது அடியார்களுக்கு வழங்கிக் கொள்கிறான். திருமாலும் அணுகமுடியாத எங்கள் ஆலம் உண்ட சிவனின் அருளை விரைந்து பெற்றுப்பயன் பெறுங்கள்." என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். இதை நானும் சுவாமியாரும் பலமுறை சொல்லியும் உனக்கு விளங்குவதாக இல்லை. பனைமரத்தடியில் இருந்து பாலைக் குடித்தாலும், காண்பவர் கள்ளைக் குடிப்பதாகவே நினைப்பர். இரத்த உறவினர் என்று நீ துரைசிங்கத்தைக் கருதிச் செயற்பட்டாய். உன்னை ஒரு பொருளாக அவன் ஒருபோதும் நினைப்பதில்லை. மனிதாபிமானம் ஒழுக்கமுள்ளவர்களிடம் தான் எதிர்பார்க்கலாம். தீயவர்களைக் காணவே மாணிக்கவாசகர் அஞ்சுகிறார். அப்படி இருக்க நீ எப்படி அவனுக்கு உதவச் சென்றாய். சாண் ஏற முழம் சறுக்குவது போலத்தான் உனது ஆத்மஞானமும் இருக்கிறது; ஒரு பற்றை நீக்கிவிட்டு இன்னொரு பழியைச் செய்கிறாய். சிவனடியானுக்குக் கல்லும் பொன்னும் ஒன்று. பிச்சைக்காரனுக்கும் பணக்காரனுக்கும் பேதம் தெரியாது. ஆனால் நல்லவற்றிற்கும் கெட்டவற்றிற்கும் பேதம் தெரியாது. சிவனைத் தொழுவதால் எந்தப் பயனையும் பெற முடியாது என நினைக்கிறாய். அதனால்தான் உன்மீது எனக்கு வெறுப்பு வந்தது'' என்றார் கதிரேசன்.

**ஈண்டிய மாயா இருள்கெட எப்பொரு ளும் விளங்கத்**

**தூண்டிய சோதியை மீனவனுஞ் சொல்ல வல்லன் அல்லன்**

**வேண்டிய போதே விலக்கிலை வாய்தல் விரும்புமின்தாள்**

**பாண்டிய னாரருள் செய்கின்ற முத்திப் பரிசிதுவே. 06**

''மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; ''மீன்கொடியைக் கையில் ஏந்தி வந்த பாண்டியனான சிவனின் பேரொளி என்மேல் பட்டது. அதனால் மாயை என்னும் இருள் என்னை விட்டு அகன்றது. மாயை விலகியதால் மெய்ப்பொருளின் தூய்மை புரிந்துவிட்டது. அந்தப் பேரொளியை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. இருப்பினும் வேண்டிய பொழுது இப்பேரொளியைக் கண்டு மகிழலாம். அதற்குத் தடை இல்லை. அதனால் சிவனை நாடுங்கள். முத்தி என்ற பேறு அவனிடமிருந்தே கிடைக்கிறது'' என்கிறார். இதை வெறும் சொற்களாகத் தான் பலரும் எண்ணுகின்றனர். அப்படி எண்ணுபவர்களில் நீயும் ஒருவன். மனம் ஒடுங்காது வணங்குபவனின் சிந்தனையில் பல்லாயிரம் எண்ணங்கள் முளைவிடும். அவை நல்ல எண்ணங்களாகவே இருக்கும். மனம் ஒடுங்கியவனின் சிந்தையில் சிவனைத்தவிர வேறு எந்த நினைவும் இராது. அப்படியானவனின் மனம்தான் குழப்பமில்லாது சிவனை ஆராதிக்கும். பல்வேறு சிந்தனைகளோடு சிவனை வணங்கினால் மனம் அச்சிந்தனையில் லயித்து அதனால் வரும் இன்பங்களையே அனுபவிக்கும். முன்பு மகாலிங்கம் அதைத்தானே சொன்னவன். தான் சிவனை வணங்கும்போது தனது மனம் தனது கட்டுப்பாட்டை இழந்து பழைய இன்பமான நிகழ்வுகளை நினைக்கிறது. இதை நீக்க முடியாதா..? என்று கேட்டவன். இப்போ மன அமைதியுடன் எந்தவிதமான சிந்தனையுமின்றிச் சிவனை வணங்குகின்றான். மனதில் சிவனைத் தவிர்ந்த வேறு ஒரு சிந்தனை இருந்தாலும் அது மனதைக் குழப்பிவிடும். இதை உணர்த்தத்தான் நான் உன்னோடு பேசாதிருந்தேன்'' என்றார் கதிரேசன்.

**மாய வனப்பரி மேல்கொண்டு மற்றவர் கைக்கொளலும்**

**போயறும் இப்பிறப் பென்னும் பகைகள் புகுந்தவருக்**

**காய அரும்பெருஞ் சீருடைத் தன்னரு ளே அருளுஞ்**

**சேய நெடுங்கொடைத் தென்னவன் சேவடி சேர்மின்களே. 07**

''மாணிக்கவாசக சுவாமிகள்; ''மாயக் குதிரை போன்றது மனித வாழ்வு என்பதை உலக மக்களுக்குப் புகட்டவே சிவன் குதிரை மீதேறி வந்தான். அவனைச் சார்ந்தவுடனேயே மாயையும் அதன் விளைவாக வரும் பிறப்பும் இறப்பும் அழிந்து விடுகின்றன. அவனது அருள்தான் என்றும் பெருஞ்சிறப்பைத் தருவது. அப்பேறு ஒருபோதும் யாராலும் அழிக்க முடியாதது. அதற்காகச் சிவனை நாடுங்கள்'' என்று கூறியதை அறிந்த நான் மாயையின் பிடியில் அடிக்கடி அகப்பட்டு விடுகிறேன். அவ்வேளைகளில் கதிரேசன் சொல்வது நியாயமாகத் தோன்றினாலும். பின் அது ஏனோ

என்னை விட்டுச் சென்று விடுகிறது. இதற்குக் காரணம் எனது அலைபாயும் மனமாகும். கதிரேசண்ணையின் மனம் துருப்பிடிக்காத இரும்பு. அதற்குச் சிவ உணர்வு என்னும் களிம்புபடாத சாயம் பூசப்பட்டுள்ளது. அச்சாயத்தை விலக்கித் தீய நினைவுகள் என்னும் துருசென்று தாக்கமாட்டாது. எனது மனம் சலனப்பட்டது. அதனால் தீய உணர்வுகள் அடிக்கடி புகுந்து விடுகின்றன. அந்த நேரம் அதைத் தடுக்க வேண்டும் என்ற உணர்வு உண்டாவதில்லை. அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நினைத்தாலும் அதிலிருந்து விடுபட முடியவில்லை'' என்றான் நல்லைநாதன்.

''வலிமையான உயிர்கள் தான் நீரிலும் நிலத்திலும் நிலைத்து வாழும். வலிமையற்ற உயிர்கள் வலிமையான உயிர்களால் அழிக்கப்பட்டுவிடும். அதற்கு வழி வலிமையை உண்டாக்குவது பஞ்சதந்திரக் கதை ஒன்று முயல் சிங்கத்தைத் தந்திரமாக வென்றதாகக் கூறப்படுகிறது. இது சிங்கத்தையும் முயலையும் உருவகித்து மனிதனுக்குப் புத்திமதி சொல்லும் கதை. இயலாது என்று நினைத்தால் பஞ்சு மூட்டையையும் தூக்க முடியாது. இயலும் என்று நினைத்தால் மலையையும் தூக்க முடியும் என்பார்கள். அதற்குக் காரணமாக இருப்பது மனவலிமை. அதைப் பிறரால் உருவாக்க முடியாது. அவரவரே உருவாக்க வேண்டும்'' என்றார் கதிரேசன்.

**அழிவின்றி நின்றதோர் ஆனந்த வெள்ளத் திடையழுத்திக்**

**கழிவில் கருணையைக் காட்டிக் கடிய வினையகற்றிப்**

**பழமலம் பற்றறுத் தாண்டவன் பாண்டிப் பெரும்பதமே**

**முழுதுல குந்தரு வான்கொடை யேசென்று முந்துமினே. 08**

கவிதாவும் மகேசனும் கதிரேசன் வீட்டுக்கு வந்தனர். கவிதா சொன்னாள்; ''தாத்தா, நீங்கள் செய்த உதவியை எத்தனை பிறவிகளை எடுத்தாலும் என்னால் மறக்க முடியாது. இப்போ நான் மிகமிக மகிழ்வாக இருக்கிறேன். அதற்குக்காரணம் நீங்கள் சொல்லி நான் வணங்கிய சிவனாகும். அவனின் அருளால் நான் இப்போ கர்ப்பமாக இருக்கிறேன். காலையில் வாந்தியெடுத்து மயங்கி விட்டேன். வைத்தியரிடஞ் சென்றபோது நான் கர்ப்பமாக இருப்பதாக வைத்தியர் சொன்னார். அந்த இனிமையான நல்ல செய்தியை உங்களுக்குச் சொல்லி ஆசி பெறவே இங்கு வந்தோம்" என்று சொல்லி இருவரும் கதிரேசனைப் பணிந்தனர்.

மிகவும் மகிழ்ச்சி மகளே, உனக்கு எந்தக்குறையும் சிவனருளால் உண்டாக மாட்டாது. மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவது போல, "அவன் அகண்ட சச்சிதானந்தம்,

அவனருளால்தான் அனைத்தும் நிகழ்கிறது. வினை அகலுகிறது. தீய எண்ணங்கள் அழிகிறது. சிவனருள் வாய்க்கிறது. அதற்காக நாம் சிவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். உலகிலுள்ளோர் இவற்றைப் புரிந்து சிவனை நாட வேண்டும்" என்று கூறி இருவருக்கும் நீறிட்டுவிட்டு கண்களை மூடிச் சிவனைப் பிரார்த்தித்தார். பூசைத்தட்டில் பலவகையான பூசைப் பொருட்கள் இருந்தன. கண்களை மூடியவாறு பூசைத்தட்டில் கைவைத்து ஒரு பொருளை எடுத்தார். அது கற்கண்டு. மகிழ்வுடன் சிரித்த கதிரேசன் உனக்குச் சிவனருளால் மகன் பிறப்பான்" என்று கூறிக் கற்கண்டைக் கவிதாவிடம் கொடுத்தார் கதிரேசன்.

**விரவிய தீவினை மேலைப் பிறப்பழுந் நீர்கடக்கப்**

**பரவிய அன்பரை என்புருக் கும்பரம் பாண்டியனார்**

**புரவியின் மேல்வரப் புந்திக் கொளப் பட்ட பூங்கொடியார்**

**மரவியல் மேல்கொண்டு தம்மையும் தாம் அறியார் மறந்தே 09**

கவிதா சுவாமியாரிடம் தான் கர்ப்பமுற்றிருப்பதைச் சொல்வதற்காகத் தனது கணவனுடன் ஆச்சிரமத்திற்கு வந்தபோது சுவாமியார் பக்தர்களுக்கு உரையாற்றிக் கொண்டிருந்தார்; "சிவனடியார்களே, வினையை ஒழிப்பதற்காகச் சிவனடியார்கள் சிவனை மெய்யன்புடன் வழிபட்டால், அவர்களைப் பரவசப்படுத்துவதற்காகச் சிவன் குதிரையின்மீது ஏறி வருவான். பண்பட்ட மெய்யடியார்கள் தமது மனதை அவனிடம் கொடுத்துவிட்டு மரம்போல உணர்வற்று நிற்பர். அவ்வாறுதான் சிவன் வந்து என்னை ஆட்கொண்டவன்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். அவன் குதிரையின்மீது ஏறி வருவதை மெய்யடியார்கள் கண்டு மெய்மறந்து நிற்பர். இது ஞானத்தால் உணர வேண்டிய செயலாகும். பண்பட்ட மெய்யடியார்களின் மனதில் கோவில் கொண்டிருக்கும் சிவன் அடியார்களுக்குக் காட்சி தருவது அவர்களுக்குத்தான் புரியும். சாதாரணமானவர்களுக்கு இதைச் சொன்னாலும் புரிந்து கொள்ள மாட்டார்கள்" என்று கூறிய சுவாமியார் எழுந்து சிவபூசை செய்தார். அதன்பின் சுவாமியார் வந்து மண்டபத்தில் அமர்ந்தார். கவிதாவும் மகேசனும் சுவாமியாரைப் பணிந்தனர்.

"இன்று உங்கள் இருவரினதும் முகம் பொலிவாகவும், மகிழ்வாகவும் இருக்கிறது. சிவன் உங்களை ஆசீர்வதிப்பாராக" என்றார்.

"நன்றி சுவாமி, தங்களின் ஆசீர்வாதம் இருக்கும்வரை எமக்கு எந்தக் குறைகளும் வராது. நான் இன்று மிக்க மகிழ்வுடன் இருப்பதற்குக் காரணம் நான் கர்ப்பமாக இருக்கிறேன்" என்றாள் கவிதா.

“மிகவும் மகிழ்ச்சியம்மா” என்று நீறு கொடுத்த சுவாமியார் பின் தட்டில் இருந்த பூ ஒன்றை எடுத்துக் கொடுத்தார். அது கொன்றைப்பூ. அதைப் பார்த்துவிட்டுச் சொன்னார்; “எல்லோரும் முதலில் தமக்கு ஆண்குழந்தை பிறக்க வேண்டும் என்று சிவனைப் பிரார்த்திப்பர். உனக்கு ஆண்குழந்தை பிறக்கும்” என்றார்.

**கூற்றைவென் றாங்கைவர் கோக்களையும் வென்றிருந்தழகால்**
**வீற்றிருந் தான்பெருந் தேவியுந் தானும் ஓர் மீனவன்பால்**
**ஏற்றுவந் தாருயி ருண்ட திறலொற்றைச் சேவகனே**
**தேற்றமிலாதவர் சேவடி சிக்கெனச் சேர்மின்களே. 10**

“நன்றி சுவாமி, தங்களின் ஆசியுடன் சிவனின் அனுக்கிரகம் எமக்குக் கிடைத்துள்ளது. அவனது அருள் இல்லாவிட்டால் அண்டங்களே அசையாது. அவனது அருள் இருந்தால் நடவாதது எது?'' என்று கேட்டாள் கவிதா.

''மகளே, சிவன் யமனையும் ஐம்புலன்களையும் வென்றவன். உமையுடன் பாண்டியன் முன் தோன்றி அவனை ஆட்கொண்டவன். இன்னும் தெளிவுபெறாத நீங்கள் நினைப்பதெல்லாம் நடக்கும். எதிரிகளால் உங்களை வெல்ல முடியாது'' என்றார் சுவாமியார்.

''எமது நினைவு உணர்வு யாவும் சிவனைப் பற்றியதே. அவனை நம்பியோர் உலகில் பெரும் இன்பத்துடன் வாழ்வர். அவர்களுக்கு எந்தக் குறைகளையும் சிவன் வைக்கமாட்டான். இது எமது அனுபவம்'' என்றாள் கவிதா.

*திருச்சிற்றம்பலம்.*